මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: : PRE/2024/31 2024.08.14

## சனாதிபதித் தேர்தல் - 2024
## பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் வேலைத்திட்டம் - 2024.08.15

2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 2024.08.14 ஆம் திகதி மதியம் 12.00 மணி வரை வைப்புப் பணம் செலுத்திய வேட்பாளர்கள் அனைவருக்கும் 2024.08.15 ஆம் திகதி பெயர் குறித்த நியமனங்களைக் கையளிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திற்கு வருகை தருவதற்கான அதேபோல், பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையேற்கும்போது அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1. பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல்**

தேர்தல் ஆணைக்குழு சார்பாக ஆணைக்குழுவின் தவிசாளரினாலும் அதன் உறுப்பினர்களினாலும் இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் 2024.08.15 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரையான காலத்துள் நியமனப்பத்திரங்கள் கையேற்கப்படும்.

**2. பெயர் குறித்த நியமனப்பத்திரங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்தல்**

எவரேனும் எதிர் வேட்பாளர் ஒருவரினால் அல்லது அத்தகைய எதிர் வேட்பாளரின் பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் கையொப்பமிட்ட நபரினால் வேட்பாளர் ஒருவரின்/வேட்பாளர்களின் பெயர் குறித்த நியமனப்பத்திரங்களுக்கு பெயர் குறித்த நியமன தினத்தன்று மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை எழுத்திலான ஆட்சேபனைகளை முன்வைக்க முடியும்.

**3. 2024.08.15 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு அலுவலக வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளவர்கள்**

i. வேட்பாளர்கள்.

ii. வேட்பாளர்களின் பெயர் குறித்த நியமனப்பத்திரங்களில் கையொப்பமிட்டவர்கள்.

iii. வேட்பாளர் ஒருவர் சார்பாக வேட்பாளரினால் தெரிவுசெய்யப்பட்ட மற்றுமொருவர்.

iv. வேட்பாளர் ஒருவர் சார்பாக 03 விருந்தினர்கள் வீதம்.

v. தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பேரில் தகவல் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிபெற்ற ஊடக நிறுவனங்கள் சார்பாக செய்தித் தொகுப்பிற்காக வருகைதரும் ஊடக நிறுவனங்களின் அனுமதி பெற்ற பிரதிநிதிகள்.

vi. தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதிபெற்ற பணியாட்குழு மற்றும் துணைநிலைச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள்/ஊழியர்கள்.

vii. தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தின் பாதுகாப்பு அலுவலர்களுக்கும், துப்புரவேற்பாட்டுச் சேவை பணியாளர்களுக்கும்.

viii. வேட்பாளர்களுக்கு பிரத்தியேக பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்புப் பிரிவுகளினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள அரச பாதுகாப்பு அலுவலர்கள் (PSO)

**4. பெயர் குறித்த நியமனங்கள் கையேற்கப்படும் மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளவர்கள்**

i. வேட்பாளர்கள்.

ii. வேட்பாளர்களின் பெயர் குறித்த நியமனப்பத்திரங்களில் கையொப்பமிட்டவர்கள்.

iii. வேட்பாளர் ஒருவர் சார்பாக வேட்பாளரினால் தெரிவுசெய்யப்பட்ட மற்றுமொருவர்.

iv. தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதிபெற்ற பணியாட்குழு வினர்.

v. அனுமதிபெற்ற ஊடக நிறுவனங்களின் செய்தித் தொகுப்பிற்கு பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையேற்கும் மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள கமரா கலைஞர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள்.

5. **வேட்பாளர்களும், பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் கையொப்பமிட்டவர்களும், வேட்பாளர்கள் சார்பாக வருகைதரும் மற்றைய நபரும், விருந்தினர்களும், வருகைதரும் வாகனங்களும்**

i. வேட்பாளரின் வாகனத்தில் மாத்திரம் ("A" **எழுத்தைக் கொண்ட வாகன அனுமதிப்பத்திரம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.**) தேர்தல் ஆணைக்குழுவின் வளவினுள் பிரவேசித்த பின் அங்கு தரித்து நிறுத்திவைப்பதற்கு/ வேறு வகையில் தரித்து நிறுத்திவைப்பதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளவர்களும் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக பெயர் குறித்த நியமன இடத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள மற்றைய நபரின் வாகனங்கள் **("B" எழுத்தைக் கொண்ட வாகன அனுமதிப்பத்திரம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.)** சரண மாவத்தையில் பிரவேசித்து குறிப்பிட்ட நபரை அதிலிருந்து இறக்கிய பின் அந்த வாகனங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை வாகனச்சாலையிலும், இராஜகிரிய கொட்டா வீதியில் அமைந்துள்ள இருதயநாதர் தேவஸ்தான வளவிலும், இராஜகிரிய ஜனஜய சிட்டி வாகனச்சாலையிலும் தரித்து நிறுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும்.

iii. வேட்பாளர்களின் விருந்தினர்கள் வருகைதரும் வாகனங்கள் **("C" எழுத்தைக்கொண்ட வாகனங்கள்**) பழைய கொட்டா வீதியிலிருந்து அல்லது பாராளுமன்ற வீதியிலிருந்து வந்து சரண மாவத்தைக்கு பிரவேசிக்கக்கூடிய இறுதி வீதித்தடை வரை வந்து விருந்தினர்களை அந்த இடத்தில் இறக்கிய பின் அந்த வாகனங்களும் மேலே ii இல் குறிப்பிடப்பட்ட அதே இடத்தில் வாகனங்களைத் தரித்து நிறுத்தி வைக்க வேண்டும்.

iv. மேலே ii, iii ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டவாறு வருகைதருவோருக்கு குறித்த காவல் சாவடிகளிலிருந்து தேர்தல் ஆணைக்குழு வரை வருவதற்கு ஆணைக்குழு வாகன வசதிகளை (Shuttle Servies) ஏற்பாடு செய்யும்.

6. **(1) தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தினுள் பிரவேசிக்கும் இராஜகிரிய சரண மாவத்தையில் அமைந்துள்ள நிறுவனங்கள்**

2024.08.15 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் உட்பிரவேசிக்க முடியாதவாறு இராஜகிரிய சரண மாவத்தை பொலிஸாரினால் மூடப்பட்டிருக்கும் என்ற விடயம் அங்கு அமைந்துள்ள அனைத்து நிறுவனங்களிலுமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வோருக்கும் அதேபோல் அவற்றின் பணியாட்குழுவினருக்கும் அறிவிக்கப்படுகிறது.

**(2) இராஜகிரிய நகர்ப்புறத்தில் அமைந்துள்ள ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாட்குழுவினரும், அத்தகைய இடங்களுக்கு வருகைதருவோரும், வாகனங்களும்**

மேலே 6 இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பணி புரிவோருக்கும், அத்தகைய நிறுவனங்களுக்கு வருகைதரும் வாகனங்களுக்கும், சரண மாவத்தை வழியாக உட்பிரவேசிப்பதற்கான பாதையில் பயணிப்பதற்கும் அன்றைய தினம் மு.ப. 6.00 மணி முதல் பி.ப. 2.00 மணியளவு வரை அனுமதிக்கப்பட மாட்டாது என்பதால், குறித்த போக்குவரத்து வசதிகளை இராஜகிரிய பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள நுழைவுப் பாதை வழியாகவே ஏற்பாடுசெய்து கொள்ள வேண்டும்.

7. **தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தின் சுற்றயலிலுள்ள பெருந்தெருக்களில் வாகனப் போக்குவரத்தை நிருவகிப்பதற்காக பொலிஸாரினால் 2024.08.15 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டம்**

i. பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையளிப்பதற்காக வருகைதரும் வேட்பாளர்களின் வாகனங்களுக்கு ஆயுர்வேத சந்தியைத் தாண்டி பழைய கோட்டே வீதி வழியாக அல்லது பாராளுமன்ற வீதி வழியாக வருகை தந்து சரண மாவத்தையில் பிரவேசித்து தேர்தல் ஆணைக்குழு அலுவலக வளவுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

ii. பெயர்குறித்த நியமனங்களைக் கையளிப்பதற்கு வருகைதரும் வேட்பாளர்கள், அதற்காக வருகைதந்த வீதிகள் ஊடாக பெயர் குறித்த நியமன நடவடிக்கைகள் முடிவடைந்த பின் திரும்பிச் செல்ல வேண்டும்.

iii. அன்றைய தினம் அமுல்படுத்தப்படும் விசேட வாகனப் போக்குவரத்து வேலைத்திட்டம் பற்றி பொலிஸாரினால் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவார்கள்.

8. **ஊடக நிறுவனங்களிலிருந்து வருகைதரும் அலுவலர்கள், பிரதிநிதிகள், கமரா கருவிகள் முதலியவற்றைப் பரிசோதித்து தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் வரை போக்குவரத்துச் செய்தல்**

இந்த நடவடிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவினதும் சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் பிரிவுகளதும் ஆலோசனைப்படி அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்படுவதுடன், அது குறித்து அத்திணைக்களம் ஊடக நிறுவனங்களை அறிவுறுத்தும்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk Election Commission of Sri Lanka SriLankaElectionCommission electionsl